இருக்கவே கூடாது (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே எல்லோரும் முடிவு செய்வதோடு உங்கள் அனைவருக்கும் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் பதிலுரை. (குறுக்கீடு)

6. கலசப்பாக்கம் தொகுதி, மேலராணி அரசு மேல்நிலைப் பள்ளி, கிணற்றில் தவறி விழுந்து இறந்த மாணவன் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் அமைந்திருக்கும் மேலராணி அரசு மேல்நிலைப் பள்ளியில், கடந்த வாரம் தண்ணீர் குடிப்பதற்காக ஒரு மாணவன் அருகில் இருந்த கிணற்றுக்குச் சென்று நீர் அருந்தியபோது தவறி விழுந்து மரணம் அடைந்துவிட்டான் என்றும், அந்த மாணவனுடைய குடும்பத்திற்கு அரசின் சார்பில் நிதி உதவி அளிக்கப்படுமா என்றும் ஒரு கேள்வியைக் கேட்டபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே குறுக்கிட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் அரசின் சார்பில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம் இருந்து இச்சம்பவம் பற்றி அறிக்கையினை உடனடியாகப் பெற்று, அந்த அறிக்கையின் அடிப்படையில், கிணற்றில் தவறி விழுந்து இறந்துபோன கலசப்பாக்கம், மேலராணி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் படித்துவந்த 13 வயதுடைய மாணவன் கணேசன் குடும்பத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000 நிதியுதவியாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றே வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிற அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கோரிக்கையை, கோரிக்கை வைத்த 3 மணி நேரத்திற்குள்ளாகவே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)